# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## நிகழ்வுகள் - 2020

### சனவரி-2020

| | | |
|---|---|---|
| 25/01/2020 | சனிக்கிழமை | தமிழ்மொழி அரையாண்டுத் தேர்வு |

### பெப்ரவரி-2020

| | | |
|---|---|---|
| 09/02/2020 | ஞாயிற்றுக்கிழமை | நிர்வாகிகள் சந்திப்பு |
| 16/02/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழிப் பொதுத்தேர்வு - 2020 விண்ணப்ப முடிவுநாள் |

### மார்ச்-2020

| | | |
|---|---|---|
| 22/03/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்க்கலை ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு |

### ஏப்ரல்-2020

| | | |
|---|---|---|
| 18/04/2020 | சனிக்கிழமை | வளர்தமிழ் 12 மாணவர்களுக்கான செயலமர்வு |
| 19/04/2020 | ஞாயிற்றுக்கிழமை | நிர்வாகிகள் சந்திப்பு |
| 26/04/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி பொதுத்தேர்வுகளில் பணியாற்றும் மண்டபப் பொறுப்பாளர்கள், முதன்மை மேற்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள், பதிவாளர்களுக்கான சந்திப்பு |

### மே-2020

| | | |
|---|---|---|
| 02/05/2020 | சனிக்கிழமை | தமிழ்மொழி புலன்மொழிவளத் தேர்வு 1ஆம் நாள் |
| 03/05/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி புலன்மொழிவளத் தேர்வு 2ஆம் நாள் |
| 10/05/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி புலன்மொழிவளத் தேர்வு 3ஆம் நாள் |
| 17/05/2020 | ஞாயிற்றுக்கிழமை | இல்ல மெய்வல்லுநர் போட்டி விண்ணப்ப முடிவு நாள் |
| 31/05/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி எழுத்துத்தேர்வின் வெளி மண்டப ஒழுங்கமைப்பாளர்களாகப் பணியாற்றுவோருக்கான சந்திப்பு |

### யூன்-2020

| | | |
|---|---|---|
| 06/06/2020 | சனிக்கிழமை | தமிழ்மொழி எழுத்துத்தேர்வு |
| 13/06/2020 | சனிக்கிழமை | தமிழ்மொழி பாலர் நிலைத் தேர்வு |
| 14/06/2020 | ஞாயிற்றுக்கிழமை | இல்ல மெய்வல்லுநர் போட்டி நடுவர்களுக்கான செயலமர்வு |
| 21/06/2020 | ஞாயிற்றுக்கிழமை | நிர்வாகிகள் சந்திப்பு |
| 21/06/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்க் கலைத்தேர்வு விண்ணப்ப முடிவு நாள் |
| 27/06/2020 | சனிக்கிழமை | இல்ல மெய்வல்லுநர் தெரிவுப் போட்டிகள் |
| 28/06/2020 | ஞாயிற்றுக்கிழமை | இல்ல மெய்வல்லுநர் தெரிவுப் போட்டிகள் |
| வாரஇறுதி நாட்களில் | | தமிழியல் பட்டப்படிப்புத் தேர்வு |

### யூலை-2020

| | | |
|---|---|---|
| 04/07/2020 | சனிக்கிழமை | இல்ல மெய்வல்லுநர் இறுதிப் போட்டிகள் |
| 12/07/2020 | ஞாயிற்றுக்கிழமை | பள்ளிகள் மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் திறன் போட்டி முடிவுகளை தலைமைப்பணியகத்தில் ஒப்படைப்பதற்கான இறுதி நாள். |

### ஆகஸ்ட்-2020

### செப்ரம்பர்-2020

| | | |
|---|---|---|
| 13/09/2020 | ஞாயிற்றுக்கிழமை | நிர்வாகிகள் சந்திப்பு |
| 20/09/2020 | ஞாயிற்றுக்கிழமை | தியாகதீபம் திலீபன் ஆய்வரங்கு |
| 27/09/2020 | ஞாயிற்றுக்கிழமை | திணைக்கள மட்டத்திலான திருக்குறள் திறன் போட்டி |

### அக்டோபர்-2020

| | | |
|---|---|---|
| 04/10/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு (வளர்தமிழ் - 5 வரை) |
| 11/10/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்க்கலை எழுத்துத்தேர்வு |
| 11/10/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு (வளர்தமிழ் - 6 தொடக்கம் 12 வரை) |
| 18/10/2020 | ஞாயிற்றுக்கிழமை | திருக்குறள் திறன் இறுதிப் போட்டி |
| 18/10/2020 | ஞாயிற்றுக்கிழமை | தமிழ்ச்சோலை முத்தமிழ் விழா - 2020 விண்ணப்ப முடிவு நாள் |
| 17-10 தொடக்கம் 01-11 வரை | | தமிழ்க்கலை செய்முறைத்தேர்வு (பாடசாலை விடுமுறை நாட்களில்) |

### நவம்பர்-2020

### டிசம்பர்-2020

| | | |
|---|---|---|
| 06/12/2020 | ஞாயிற்றுக்கிழமை | நிர்வாகிகள் சந்திப்பு |
| 19/12/2020 | சனிக்கிழமை | தமிழ்ச்சோலை முத்தமிழ் விழா-2020 |
| வாரஇறுதி நாட்களில் | | தமிழியல் பட்டப்படிப்புத் தேர்வு |

## புலன்மொழி வளத்தேர்வு (தமிழ்மொழி)

**தேர்வு நாட்கள் :** 02-05-2020 சனிக்கிழமை, 03-05-2020 ஞாயிற்றுக்கிழமை, 10-05-2020 ஞாயிற்றுக்கிழமை

**தேர்வு நேரம் :** காலை 9 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை (மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நேரங்களில் மாற்றம் ஏற்படலாம்.)

## எழுத்துத்தேர்வு (தமிழ்மொழி)

**தேர்வு நாள் :** 06-06-2020 சனிக்கிழமை **செயற்பாட்டு நேரம் :** காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை

## நிர்வாகிகள் கவனத்திற்கு

2020ஆம் ஆண்டின் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தின் இரு பக்கங்கள் அடங்கிய நிகழ்வுகளின் தொகுப்பினை ஆசிரியர்கள், நிர்வாக, சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கி அதன் கையொப்பப் பிரதியினை தலைமைப் பணியகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தங்கள் பள்ளியில் அல்லது வேறு ஒரு பள்ளியுடன் இணைந்து புலன்மொழிவளத்தேர்வு நடைபெறுவதற்கான மண்டப ஒழுங்குகளைச் செய்து 16-02-2020 இற்கு முன்பு தலைமைப் பணியகத்திற்குத் (எழுத்து மூலம்) தெரியப்படுத்துங்கள். புலன்மொழிவளத் தேர்விற்கான மண்டபப் பாவனை நேரம் : காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

தங்களது பள்ளி ஆசிரியர்கள் வேறு பள்ளிகளுக்கு புலன்மொழிவளத்தேர்விற்கு நடுவர்களாகக் கடமையாற்றச் செல்லுதல் கட்டாயமாகும் அதற்கான அடிப்படை ஒழுங்குகளை நிர்வாகிகள் உறுதிப்படுத்துதல் அவசியமாகும்.

யூன், யூலை மாதங்களில் நடைபெறும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு ஆசிரியர்கள் செல்லுதல் கட்டாயமாகும் அவர்களது தகவல்களை 26-04-2020 ற்கு முன்பு தலைமைப் பணியகத்திற்குத் (எழுத்து மூலம்) தெரியப்படுத்தவும்.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் நிர்வாகியும், குறைந்தது மேலும் இருவரும் (நிர்வாக, சங்க உறுப்பினர்கள்) எழுத்துத்தேர்வு மண்டப ஒழுங்கமைப்பாளர்களாகக் கடமையாற்றுவது அவசியமாகும். மண்டப ஒழுங்கமைப்பாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் 31-05-2020 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சந்திப்பில் தவறாது கலந்துகொள்ளுதல் அவர்களது பணியினைத் திறம்படச்செய்ய வழிவகுக்கும்.

இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் உங்கள் பள்ளியில் கற்கும் மாணவர்களை பங்குபற்ற வைத்தல் அவசியமாகும். **(தமிழ்மொழி கற்கும் மாணவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும்)**

திருக்குறள் திறன் போட்டிக்கு உங்கள் அருகாமையில் உள்ள தமிழ்ச்சோலை நிர்வாகியுடன் தொடர்பு கொண்டு அவர்களது ஆசிரியர்களை நடுவர்களாக அழையுங்கள். அச் சந்தர்ப்பம் அமையாது போனால் போட்டி நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு தலைமைப் பணியகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

19-12-2020 நடைபெறும் தமிழ்ச்சோலை முத்தமிழ் விழாவில் அனைத்துப் பள்ளிகளும் பங்குபற்றுதல் சிறப்பாகும்

## ஆசிரியர்கள் கவனத்திற்கு (தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள்)

தமிழ்மொழி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தலைமைப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் ஆசிரியர் செயலமர்வில் பங்குபற்றுவது கட்டாயமாகும். (பங்குபற்றாத ஆசிரியர் தொடர்ந்து கற்பித்தலுக்குத் தகுதியானவர்களா என்பதனைத் தலைமைப் பணியகம் மீளாய்வு செய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறீர்கள் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.)

தமிழ்மொழி கற்பிக்கும் (Île de France ல் உள்ள) அனைத்து ஆசிரியர்களும் புலன்மொழி வளத் தேர்வு, எழுத்துத்தேர்வில் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றுவது கட்டாயமாகும்.

யூன், யூலை மாதங்களில் நடைபெறும் விடைத்தாள் திருத்தும் பணியில் தமிழ்மொழி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் (கற்பிக்கும் வகுப்பு அடிப்படையில்) கலந்து கொள்ள வேண்டும் என்பது தலைமைப் பணியகத்தின் நிலைப்பாடாகும். அச் சூழ்நிலை அமையாது போனால் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு ஆசிரியர்கள் செல்லுதல் கட்டாயமாகும். உங்களது தகவல்களை 26-04-2020 ற்கு முன்பு தலைமைப் பணியகத்திற்குத் (நிர்வாகியூடாக எழுத்து மூலம்) தெரியப்படுத்தவும்.

**26-04-2020 அன்று நடைபெறும் சந்திப்பில் பங்குபற்றாத ஆசிரியர்கள் மேற்பார்வையாளர்களாகக் (புலன்மொழிவளத்தேர்வு, எழுத்துத்தேர்வு இரண்டிலும்) கடமையாற்றுவது தவிர்க்கப்படும் என்பதனை அனைத்து ஆசிரியர்களும் கவனத்தில் எடுக்கவும்.**

## தேர்வு நாட்களின்போது கடமையிலிருப்போர் கவனத்திற்கு

ஆண்களாயின் கறுப்பு நிற நீளக்காற்சட்டையும், தனிவெள்ளைச்சட்டையும், பெண்களாயின் சேலையும் (ஆசிரியர்கள், நிர்வாகிகள் தமிழ்ச்சோலையின் பச்சை நிறச்சேலை) அணிதல் கட்டாயமாகும்.

## நிர்வாகிகள், ஆசிரியர்கள், சங்கச் செயற்பாட்டாளர்கள் கவனத்திற்கு

தலைமைப் பணியகத்துடனான தொடர்புகளுக்கு மின்னஞ்சல் பாவிப்பது சிறந்த வழிமுறையாகும்.

மின்னஞ்சல் **:** tamoulcholai@yahoo.fr      தொலைபேசி **:** 09 84 06 38 83

**பணியக நேரம் : புதன்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை 14h30 தொடக்கம் 19h30 வரை**

| | | | |
|---|---|---|---|
| பிரெஞ்சுப் பள்ளிகளின் விடுமுறை நாட்கள் (Île de France) | Vacances d'hiver | : | samedi 08 février 2020 au dimanche 23 février 2020 |
| | Vacances de printemps | : | samedi 04 avril 2020 au dimanche 19 avril 2020 |
| | Vacances d'été | : | samedi 04 juillet 2020 |
| | Rentrée scolaire | : | mardi 01 septembre 2020 |
| | Vacances de la Toussaint | : | samedi 17 octobre 2020 au dimanche 01 novembre 2020 |
| | Vacances de Noël | : | samedi 19 décembre 2020 au dimanche 03 janvier 2021 |